# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.28/2023

DW1–அசோகன் நாள்.04.08.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

எனக்கு சொந்த ஊர் எ.மேட்டூர். நான் 8 வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு மேட்டூரில் சொந்த வீடு மற்றும் 3 ஏக்கர் வயல் உள்ளது. விவசாயம் செய்கிறேன். ஒரு வருடத்தில் சுமார் 6 மாதம் விவசாயம் இருக்கும். மீதி காலங்களில் வயலுக்கு சென்று உழவு செய்வது மற்றும் ஆடு, மாடுகளை வளப்பது. 2 மாடுகள் மற்றும் 3 ஆட்டு குட்டிகள் வளர்கிறேன். வாதி சேகர் எனக்கு தெரியும். அவர் அன்னமங்கலத்தை சேர்ந்தவர். அவர் எப்படி பழக்கம் என்றால் காடு விற்கிறேன் என்று சொன்னதின் அடிப்படையில் பழக்கம். தொண்டாமந்துறையை சேர்ந்த புரோக்கர் கிருஷ்ணராஜ் மூலம் அவர் பழக்கம். அவர் சொல்லி தான் தாவா சொத்தை வாங்கினேன். கிரய ஒப்பந்தத்தில் கிருஷ்ணராஜ் கையெழுத்து செய்துள்ளார். 3 ஏக்கர் நிலத்தை மட்டுமே விவசாயம் செய்வதற்கு எனக்கு நேரம் சரியாக இருக்கும் என்றால் சரியல்ல. மேற்கொண்டு விவசாயம் செய்ய முடியும். என்னுடைய ஊரில் இருந்து தாவா சொத்து 12 கி.மீ தூரம் இருக்கும். சொத்தை வாங்கினால் 12 கி.மீ தினமும் போய் வர முடியாது என்றால் அங்கு கூலி வேலைக்கு ஆட்கள் இருக்கிறார்கள். தாவா சொத்து 5 ஏக்கர் 40 செண்ட் ஆகும். நான் முதலில் பாக்கும் போது என்ன பயர் செய்யப்பட்டிருந்தது என்றால் அப்போது மேட்டுக்காடாக இருந்தது. அரசலூர் கிராமம் விவசாய கிராமம் என்றால் சரிதான். அங்கிருக்கும் மக்களுக்கு விவசாயம் தான் வாழ்வாதாரம் என்றால் சரிதான். எனக்கு கிரயம் கொடுத்த சேகர் தாவா சொத்தில் நல்லமுறையில் விவசாயம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. நான் விவசாயம் போக லேவாதேவி தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை ரூ.11.75லட்சத்துக்கு விலை பேசினேன். அது சம்மந்தமாக ரூ.11.75லட்சத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டோம். 09.04.2012ம் தேதி அந்த ஒப்பந்தம்

செய்துகொண்டோம். ஒப்பந்த தேதியில் ரூ.5லட்சம் கொடுத்தேன். ஒப்பந்த செய்யும் தேதியில் தாவா சொத்தின் மார்க்கெட் மதிப்பு எவ்வளவு என்றால் ரூ.11.75லட்சம் தான் பெறும். நானும், கிருஷ்ணராஜ்மும் விலைகேட்க போனோம். வாதி ரூ.12லட்சம் என்று சொன்னார். நான் ரூ.11.75லட்சத்திற்கு வாங்க ஒப்புக்கொண்டேன்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.